# சகல ஆசீர்வாதங்களின் இடம்

*மழை, சூரிய வெளிச்சம் மற்றும் சரீரத்திற்குரிய ஏராளமான ஆசீர்வாதங்கள் ஆகியவை தேவனால், பரிசுத்தவான்கள் மற்றும் பாவிகள் ஆகிய இரு சாராருக்குமே கொடுக்கப்படுகின்றன (மத். 5:45). அவர் துன்மார்க்கருக்கும் மற்றும் நீதியுள்ளவர்களுக்கும், ''மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் அவர்களுக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் அவர்களுடைய இருதயங்களை நிரப்பி" (அப். 14:17) வருகின்றார். இருப்பினும் அது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு உண்மையாவதில்லை. பிதாவினுடைய ஒரே பேறான குமாரனே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பகிர்ந்து வழங்க வேண்டும் என்பதே பிதாவின் நல்மகிழ்வாய் உள்ளது (யோவா. 10:9; 14:6; 15:5; அப். 4:12; கொலோ. 1:27). இயேசுவுக்குப் புறம்பே ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் எதுவும் இல்லை; அவருக்குள் அவை அனைத்தும் காணப்படுகின்றன (எபே. 1:3).*

*கிறிஸ்துவுக்குப் புறம்பே உள்ள தனிநபர்கள் இன்னமும் தங்களின் பாவங்களும் அக்கிரமங்களும் தங்களுக்கு எதிராய் குறிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றனர்; ஆனால் ஒரு நபர் கிறிஸ்துவுக்குள் வந்த நேரம் தொடங்கி, பொய்யுரையாத ஒருவரால், ஒவ்வொரு பாவமும் மன்னிக்கப்பட்டு, மறக்கப்பட்டது என்று கூறப்படும் வாக்குத்தத்தத்தைப் பெறுகின்றார் (எபி. 8:12). கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்கள் தங்களின் தேவனுடைய ஆவியானவரான பரலோக விருந்தினர் தங்கியிருக்கும் மகிழ்ச்சியை அனுபவிப்பதில்லை, ஆனால் இயேசுவுக்குக் கீழ்ப்படிகின்ற ஒவ்வொருவருக்குள்ளும் வாசம் பண்ண அவர் வருகின்றார் (யோவா. 14:17; அப். 2:38; 5:32; கலா. 4:6).*

*அவிசுவாசிகள் தங்கள் சொந்த வெளிச்சத்தில் நிற்கின்றனர், மற்றும் அவர்கள் தங்களுடைய சிறந்த சொந்த ஆர்வங்களுக்கெதிராக வேலை செய்கின்றனர். இயேசுவுக்குள் வந்தவர்கள் சிருஷ்டிப்பின் விதிகளுக்கு ஒப்பத் தங்களை அமைத்துக் கொள்கின்றனர். அவர்கள் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கின்றது என்ற (ரோமர் 8:28) வாக்குத்தத்தத்தைப் பெற்றுள்ளனர்.*

*தேவனை விசுவாசித்தும் கூட, கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்கள் "எங்கள் பிதாவே" என்று அழைத்து ஜெபம் செய்யத் தகுதியற்றவர்களாய் இருக்கின்றனர். "எங்களைப் படைத்தவரே" என்று மட்டுமே அவர்களால் சரியாகக் கூற முடியும். இதற்கு மாறாக, கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள்*

*பிதாவின் குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் "அப்பா! பிதாவே!" என்று அவரை அழைப்பதில் அவர் பிரியப்படுகின்றார் (கலா. 4:5-7). அது போலவே, கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்கள் தங்களுக்காகப் பேசப் பெரிய சகோதரரைப் பெற்றிருப்பதில்லை. தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் இயேசுவைத் தங்களுடைய மூத்த சகோதரராக தேவனுடைய பக்கத்தில் பெற்றுள்ளனர், அவர் நீதியுள்ள பரிந்து பேசுபவராயிருந்து, அவர்களுக்காக வேண்டுதல் செய்கின்றார் (எபி. 7:25; 1 யோவா. 2:1, 2).*

*கிறிஸ்தவமற்ற தோழமைகள் கிறிஸ்தவர்களின் வாழ்வு மற்றும் உறவுமுறைகளை வளப்படுத்தக் கூடிய ஆவிக்குரிய கூற்றில் பொதுவாகக் குறைவு படுகின்றன. ஒரு நபர் கிறிஸ்துவுக்குள் வருகின்ற பொழுது, அவர் இப்பூமியில் உள்ள மிகச் சிறந்த மனிதர்களுடன் ஐக்கியமாகின்றார். அவர்களின் ஒழுக்க விதி மிக உயர்வானதாயுள்ளது, மற்றும் அவர்களின் நோக்கமானது (பிதாவினுடைய சித்தத்தைச் செய்தல்; யோவா. 6:38) இப்பூமியில் ஒப்புவமையற்றதாக உள்ளது. கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவர், ஒளியில் உள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்குத் தகுதியுள்ள மற்றவர்களுடன் ஐக்கியம் கொள்கின்றார். அவர் இனியும் இருளில் தள்ளப்படத் தகுதியானவர்களுடன் தன் நாட்களைச் செலவழிப்பதில்லை (கொலோ. 1:12; மத். 25:30).*

*மக்கள் கிறிஸ்துவுக்குள் வருவது எப்படி என்பதைப் பின்வரும் இரு வேத வசனங்களிலேயே கூறப்படுகின்றது:*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? (ரோமர் 6:3).*

> *ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே (கலா. 3:27).*

*ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதன் மூலமாகவே கிறிஸ்துவுக்குள் வருகின்றார் என்றே இவ்விரு வசனப் பகுதிகளும் கூறுகின்றன. உண்மையான விசுவாசமும், உண்மையான மனந்திரும்புதலும் முந்தி வர, ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுக்குள் வருவதற்கு மக்கள் நிறைவேற்றும் கடைசிக் கட்டளையாய் உள்ளது. இதன் பிறகு பல கட்டளைகள் வருகின்றன. ஆனால் கிறிஸ்துவுக்குள் இருத்தல் மற்றும் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருத்தல் ஆகியவற்றின் மத்தியில் ஞானஸ்நானமே பிரிக்கும் கோடாக உள்ளது.*